மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.
O.S.No. 58 /2023

வாக்குமூலம்: வா.சா.1 – மஞ்சுளா

22.07.2025: சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியப் பிரமானம் செய்து வைக்கப்பட்டு 1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை : நான் இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு 3 வருடங்கள் முன்பு தாவா 1 லக்க சொத்தை கிரையம் பெற்றேன் என்றால் சரிதான். தாவா 2 லக்க சொத்தானது முனிசிபாலிடி சாலை என்றால் சரிதான். முனிசிபாலிடி சாலைக்கு மேற்குப் பக்கம் 1 முதல் 4 பிரதிவாதிகளின் வீடு உள்ளது என்றால் சரிதான். மேற்படி சாலை அதன் வடக்குப் பக்கம் தங்கவேல் ஆசிரியர் வீட்டுடன் முடிகிறது என்றால் சரிதான். என்னுடைய சொத்து எந்த சர்வே எண்ணில் உள்ளது என்றால் தெரியும் ஆனால் தற்போது எனக்கு ஞாபகம் இல்லை. பிரதிவாதிகள் சொத்தின் சர்வே எண் என்ன என்றால் தெரியும் ஆனால் தற்போது ஞாபகமில்லை. தாவா 2 லக்க சொத்தான முனிசிபாலிடி சாலை எந்த சர்வே எண்ணில் உள்ளது மேற்படி சாலை உள்ளது தெரியும் ஆனால் சர்வே எண் தெரியாது. இந்த வழக்கில் நான் முனிசிபாலிடிக்கு எதிராக எந்த பரிகாரமும் கேட்கவில்லை என்றால் சரிதான். தாவா மாதிரி வரைபடத்தின் விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை அளவீடு செய்ய வரும்போது நான் உடன் இருந்தேனா என்றால் இருந்தேன். நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கையை நான் ஏற்றுக்கொண்டேன் என்றால் ஏற்றுக்கொண்டேன்.

(1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது).

ஒம்/–சு.அபூர்வா,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பழனி.